தமிழ்நாடு சட்ட மன்றம்.

திங்கட்கிழமை, 1972 நவம்பர் 13.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில், பிற்பகல் 4 மணி அளவில், மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற் குறிப்பு.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. ராமதாஸ் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. ராமதாஸ் அவர்கள், 1972 செப்டம்பர் 26-ஆம் நாளன்று சென்னையில் காலமானார் என்னும் செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. ராமதாஸ் 1962 முதல் 1969 வரை சட்டமன்ற மேலவையில் ஓர் உறுப்பினராக இருந்தார். சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகப் பத்தரை ஆண்டுகள் இருந்தார். சென்னை மாநகராட்சி துணை மேயராகவும் பதவி வகித்திருந்தார்.

அவரை இழந்து துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு, இந்த அவையின் சார்பில் நமது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்வேன்.

காலம் சென்றவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் எழுந்துநின்று இரு நிமிடங்கள் மௌனமாயிருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)